## Basketball Tournament (Women)

தேனி நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் Anna University Zone -17 Basketball Tournament (Women) 18.09.2024 அன்று நடைபெற்றது. இப்போட்டியில் மண்டல அளவிலான பொறியியல் கல்லூரி மாணவிகள் அணிகள் கலந்து கொண்டன. இப்போட்டிக்கு சிறப்பு விருந்தினராக தேனி, பாராஸ்ட் ரேஞ் ஆபிசர் திரு.சிவராம் அவர்கள் கலந்து கொண்டு போட்டியினை துவக்கி வைத்து விளையாட்டின் முக்கியத்துவம், விளையாடுவதால் உடலுக்கு ஏற்படும் நன்மைகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதன் மூலம் கிடைக்கும் அரசு வேலைகள் குறித்து மாணவர்களிடையே உரையாற்றினார். இவ்விளையாட்டு போட்டியில் நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் மாணவிகள் அணி இரண்டாம் பரிசு பெற்றார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.








### Theni Melapettai Hindu Nadargal Uravinmurai

**Mr.T.Rajamohan,** B.Sc., President, TMHNU.
**Mr.P.P.Ganesh,** B.Sc., Vice President, TMHNU.
**Mr.M.M.Anandavel,** M.B.A., General Secretary, TMHNU.
**Mr. M.Palaniappan** Treasurer, TMHNU.

### EDITORIAL BOARD

**Editor in Chief**

Mr.A.Rajkumar, B.B.A., Secretary.
Mr.A.S.R.Maheshwaran, B.Sc., Secretary.
Er.S.Naveen Ram, B.E., MBA., Joint Secretary.

**Editor**

Prof.Dr. C.Mathalai Sundaram, M.E., MBA., Ph.D., MISTE., Principal, NSCET.
Mr.N.Mathavan, M.E., MBA., MISTE., (Ph.D.) Vice Principal & Head Incharge /ECE, NSCET.
Dr.M.Sathya, M.Tech., MBA., Ph.D., Vice Principal & Head Incharge /IT, NSCET.
Dr.C.Karthikeyan, M.A., B.Ed., CELTA.,Ph.D., Placement Officer, NSCET.

**Associate Editors**

Mr.R.Udhayakumar, M.E., MBA., (Ph.D.) Asst. Prof. - CSE / IQAC -Coordinator, NSCET.
Dr.R.Athilingam, M.E., Ph.D., Asso. Prof. - EEE / IQAC -Coordinator, NSCET.
Dr.N.David Mathan, M.Sc., Ph.D., Professor - Chemistry / IQAC -Coordinator, NSCET.

**Design**

Mrs.S.Lalitha,D.I.T., Junior Assistant, Office.
Mr.P.Ponmanikandan, B.B.A.,Junior Assistant, Office.

### TMHNU Executive Committee Members

Mr.P.M.P.Arulprakasam
Mr.A.S.G.Dharmarajan, B.A.,
Mr.K.Gnanaprakasam
Mr.G.N.Jawahar
Er.R.T.Jawahar, B.E.,
Mr.A.S.Jeevagan
Mr.K.K.Jeyaram Nadar
Mr.P.Kannayiram, Ex.Mc.,
Mr.K.K.Sekar
Mr.B.Ramachandran, M.B.A.,
Mr.G.K.Vijayakumar, B.Com.,

### NSCET College Committee Members

Mr. K. Anburaj, (DCT)
Er. K. Ganesapandian, B.E.,
Mr. K. Jayamanikandan, ITI.,
Mr. R. Madasamy, M.C.A.,
Er. S.N. Mathalairajan, B.E.,M.B.A.,
Mr. V.K.M. Manivannan, M.B.A.,
Er. J.N. Rajamurugan, B.E.,
Mr. K. Rajkumar, M.Sc., (CS & IT)
Mr. A.R. Saravanakumar
Er. T.S. Saravanan, B.E.,
Er. N. Selvakumar, B.E.,
Mr. P.S.P.K.P. Sermaraja, B.A.,
Er. K.A.S.T. Sivagaminathan, B.E.,
Er. A.S.S. Somasundaram, B.E.,
Mr. T.A.T.M. Venkateswaran, B.Sc.,



NADAR SARASWATHI COLLEGE OF ENGINEERING AND TECHNOLOGY
VADAPUDUPATTI, THENI - 625531.
CONTACT : 04546 -263900, 901.


# NSCET COMMUNIQU'E


Vol : X Issue : 2 April - September 2024
(Bi-Annual Issue of Nadar Saraswathi College of Engineering & Technology)


Engineering Excellence for Empowerment
Nadar Saraswathi College of Engineering & Technology

**கல்லூரியின் செயலாளர்கள்**



திரு.A.ராஜ்குமார்,B.B.A.,



திரு.A.S.R.மகேஸ்வரன்,B.Sc.,

**கல்லூரியின் இணைச்செயலாளர்**



Er.S.நவீன் ராம், B.E., MBA.,

**Communique** நமது கல்லூரியின் ஒட்டு மொத்த சாதனைகளையும் எளிதாக தெரிந்து கொள்ள பயன்படும் ஓர் தொகுப்பு களஞ்சியமாகும். தரமான நிர்வாகம், தரமான ஆசிரியர் பெருமக்களின் தரமான சேவை மனப்பான்மையே எமது கல்லூரியின் வெற்றிக்கு அடித்தளம். பெயரளவில் ஆயிரம் சொல்லலாம் ஆனால் செயல் அளவில் அந்த ஆயிரமும் நிகழ வேண்டும் என்பதையே எமது நோக்கமாக கொண்டுள்ளோம். அனைவரின் கூட்டு முயற்சியால் நம் கல்லூரி மேலோங்கி செல்வது பெருமகிழ்ச்சியளிக்கிறது.

**கல்லூரியின் முதல்வர்**



Dr.C.மதலை சுந்தரம், M.E., MBA.,MISTE., Ph.D.,

மாணவர்கள் அவர்களுக்கென ஏதாவது ஒரு தனித்திறமை பெற்றிருப்பர். அத்திறனால் அவர்கள் அடையப்போகும் உச்சம் அளவிற்குட்பட்டது அல்ல. அத்திறன் என்ன என்பதை அறிந்து அதற்கான ஆக்கமும் ஊக்கமும் அளித்தால் அவர்கள் மென்மேலும் உச்சம் பெறுவர் என்பதில் கவனம் கொண்டு செயல்பட்டு கொண்டிருக்கிறோம்! வெற்றி காண்கிறோம் ! என்பதில் மகிழ்ச்சி!

## தேசிய தரச்சான்றிதழ் பெற்ற தேனி மாவட்டத்தின் முதல் பொறியியல் கல்லூரி

ACCREDITED WITH GRADE A NAAC

## தேர்ச்சி விகித பட்டியலில் சிறப்பிடம்

- அண்ணா பல்கலைக்கழகம் வெளியிட்ட ஏப்ரல்/மே 2023 தேர்ச்சி விகித பட்டியலில் **Non-Autonomous Affiliated** கல்லூரிகளில் மாநில அளவில் 27வது இடமும், தேனி மாவட்ட அளவில் 11 ஆண்டுகளாக தொடர்ந்து முதலிடத்தை பெற்றுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.
- அண்ணா பல்கலைக்கழகம் வெளியிட்ட நவம்பர்/டிசம்பர் 2023 தேர்ச்சி விகித பட்டியலில் **Non-Autonomous Affiliated** கல்லூரிகளில் மாநில அளவில் 21வது இடமும், தேனி மாவட்ட அளவில் 11 ஆண்டுகளாக தொடர்ந்து முதலிடத்தை பெற்றுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

## முன்னாள் மாணவர்கள் சந்திப்பு

நமது நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் 20.04.2024 அன்று முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு நமது கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் கலந்து கொண்டு தங்களது கல்லூரி பருவ நினைவுகளை பகிர்ந்து ஒன்று கூடி புகைப்படம் எடுத்து மகிழ்ந்தனர். முன்னாள் மாணவர்கள் துறைவாரியாக தங்களது துறைத்தலைவர்களை சந்தித்து தற்பொழுது நடைமுறையில் இருக்கும் வேலைவாய்ப்புகள், மேலும் இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை முன்னாள் மாணவர்கள் சந்திப்பு கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.




## 78வது சுதந்திர தின விழா

நம் இந்திய திருநாட்டின் 78வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு நமது நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறையின் தலைவர் திரு.T.ராஜமோகன் அவர்கள் தேசிய கொடியினை ஏற்றி, கல்லூரியின் **Theme of the Year** **"Year of Transformation"** - ஐ வெளியிட்டு சிறப்புரையாற்றினார். மேலும் கல்லூரியின் செயலாளார்கள் திரு.**A**.ராஜ்குமார், திரு.**A.S.R**.மகேஸ்வரன் மற்றும் இணைச்செயலாளர் திரு.**S**.நவீன் ராம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி சுதந்திரதின வாழ்த்துக்களை கூறினார்கள். மேலும் சுதந்திர தினவிழாவை முன்னிட்டு கல்லூரியில் மரக்கன்றுகள் நடப்பட்டன, மாணவ, மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.











## Theme of the Year 2024-2025

· With a mission to improve the standards of students the current Academic Year 2024 – 2025 has named as **"Year of Transformation".**




## சர்வதேச யோகா தினம் - 2024



நமது நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் 21.06.2024 அன்று சர்வதேச யோகா தினம் சிறப்பாக நடைபெற்றது. இதில் தேனி அறிவுத்திருக்கோவில், மனவளக்கலை மன்றத்தின் பேராசிரியர் திருமதி.அண்ணாமலைத்தாய் மற்றும் துணைப்பேராசிரியர் திருமதி.ரேணுகாதேவி ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு யோகா செயல்முறை பயிற்சி மற்றும் அதன் நன்மைகள் குறித்து சிறப்பாக உரையாற்றி மாணவர்களுக்கு செயல்முறை விளக்கமும் அளித்தார்கள்.

## போதைபொருட்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சி

நமது நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில 12.08.2024 அன்று போதை பொருட்கள் இல்லாத தமிழ்நாடு என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. இதில் நமது கல்லூரியின் **NSS & YRC** அமைப்புகள் இணைந்து நடத்தினர். இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக தேனி மாவட்ட, மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு, காவல் ஆய்வாளர் திருமதி.செல்வக்குமாரி அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு போதைப்பொருட்கள் பற்றிய விழிப்புணர்வு மற்றும் அதனால் ஏற்படும் தீமைகள், சமுதாய சீர்கேடுகள், இதனால் குடும்பத்தில் ஏற்படும் பிரச்சனைகள், மனதளவில் ஏற்படும் பாதிப்புகள் ஆகியவற்றை மாணவர்களிடையே எடுத்துரைத்து மற்றும் போதை பொருட்கள் இல்லா தமிழகத்தை உருவாக்குமோம் என்ற உறுதிமொழியை மாணவர்கள் மற்றும் பேராசரியர்கள அனைவரும் எடுத்துக்கொண்டனர். இவ்விழாவிற்க்கான ஏற்பாடுகளை **NSS & YRC** அமைப்புகளின் ஒருங்கிணைப்பாளர்கள் திரு.பிரதீப்குமார் மற்றும் திருமதி.மகாலட்சுமி அவர்கள்சிறப்பாக செய்திருந்தனர்.






# கல்லூரி ஆண்டு விழா

நமது நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் 24.04.2024 அன்று கல்லூரி ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் திரைப்பட நடிகையும், செய்தி வாசிப்பாளருமான திருமதி. அனிதா சம்பத் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கல்லூரியின் ஆண்டு மலரை வெளியிட்டார். மாணவிகள் தங்களுடைய கல்லூரி படிப்பினை முடித்தவுடன் பணிகளுக்கு சென்று தங்களுடைய குடும்ப நிதிநிலையை தன்னிறைவு பெறச்செய்யவேண்டுமென்றும், சமுதாயத்தில் பெண்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த துணைபுரிய வேண்டுமென்றும், கல்லூரியில் படிக்கும் பெழுது மாணவ மாணவிகள் நேர்மறை எண்ணங்களை வளர்த்து பெற்றோர் மற்றம் ஆசிரியர்களின் அனுபவங்களின் மூலம் இலட்சியத்தை அடைய வேண்டுமென்று சிறப்புரையாற்றினார். இவ்விழாவில் விண்வெளி வீராங்கனை செல்வி.உதயகீர்த்திகா அவர்கள் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டு பொறியியல் மாணவர்கள் தங்களது துறைகளில் தனித்துவம் பெறவேண்டுமென்றும், கிராமப்புற மாணவர்கள் கல்லூரியில் கிடைக்கும் வேலைவாய்ப்பினை சரியாக பயன்படுத்தி சர்வதேச நிறுவனங்களில் பணிபுரிய வேண்டுமென்றும், சமூக வலைதளங்களை முறையாக பயன்படுத்துவதன் மூலம் தங்கள் துறை சார்ந்த அறிவனை பெற்று வெளிநாடுகளில் பணிபுரியும் வாய்ப்பினை பெற முடியுமென்றும் சிறப்புரையாற்றினா மேலும் துறை வாரியாக **“Best Outgoing Student”** விருதிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவனுக்கு சிறப்பு விருந்திர்னர் விருது மற்றும் ரொக்கப்பரிசினை அளித்தார். இவ்விழாவிற்கு தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறையின் தலைவர் திரு.**T**.ராஜமோகன் அவர்கள் தலைமை தாங்கினார். மேலும் உறவின்முறையின் உபதலைவர் திரு.**P.P.**கணேஷ், பொதுச்செயலாளர் திரு.**M.M.**ஆனந்தவேல் மற்றும் பொருளாளர் திரு.**P.**பழனியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரியின் செயலாளர்கள், இணைச்செயலாளர்கள், முதல்வர்கள், துணைமுதல்வர்கள் மற்றும் பேராசிரியர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.














# அறிவியல் கண்காட்சி - 2024

பெருந்தலைவர் கர்மவீரர் காமராஜர் அவர்களின் 122வது பிறந்த நாள் விழா மற்றும் கல்வித்திருவிழாவை முன்னிட்டு நமது பொறியியல் கல்லூரியில் மேல்நிலை வகுப்பு மாணவர்களுக்கு மாநில அளவிலான அறிவியல் கண்காட்சி - 2024, 10.07.2024 அன்று நடைபெற்றது. இதில் நாளைய சமூகத்திற்கு தேவையான புதிய கண்டுபிடிப்புகளுக்கான தீர்வு காணுதல், அறிவியல் , சுற்றுச்சுழல் , பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த படைப்புகளை உருவாக்க வேண்டும் என்ற விதிமுறையின் அடிப்படையில் மாணவர்கள் பலரும் ஆர்வமுடன் பங்கேற்றனர். இவ்விழாவிற்கு தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறையின் தலைவர் திரு.**T**.ராஜமோகன் அவர்கள் தலைமை தாங்கினார். மேலும் உறவின்முறையின் உபதலைவர் திரு.**P.P.**கணேஷ், பொதுச்செயலாளர் திரு.**M.M.**ஆனந்தவேல் மற்றும் பொருளாளர் திரு.**P.**பழனியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் பங்கேற்ற மாணவர்களின் படைப்புகளை நடுவர்கள் ஆராய்ந்து அதில் வெற்றி பெற்ற மாணவவ, மாணவிகளுக்கு ரொக்கப்பரிசுகள், சான்றிதழ்கள் மற்றும் கோப்பைகள் வழங்கப்பட்டன. இதில் ஏறத்தாழ 400 க்கும் மேற்ப்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவ, மாணவிகளுக்கு ரூ.15000, ரூ.10000, ரூ.5000 மற்றும் ஆறுதல் பரிசு 7 அணிகளுக்கு ரூ.2000 வழங்கப்பட்டது. இவ்விழாவிற்க்கான ஏற்பாடுகளை விழா ஒருங்கிணைப்பாளர் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சிறப்பாக செய்திருந்தார்.











# பட்டமளிப்பு விழா

நமது நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் 21.09.2024 அன்று 10ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு கோவா, தேசிய கடல்சார் ஆய்வு நிறுவனத்தின் முன்னாள் விஞ்ஞானி மற்றும் சென்னை இண்டோமர் கோஸ்டல் ஹைட்ராலிக்ஸ், நிர்வாக இயக்குநருமான டாக்டர். பொன்னம்பலம் சந்திரமோகன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பொறியியல் பட்டதாரிகள் மத்திய அரசு திட்டங்களை பயன்படுத்தி சிறந்த தொழில்முனைவோராக உருவாக வேண்டுமென்றும், அறிவை மூலதனமாக கொண்டு சரியான முறையில் திட்டமிட்டு, கடின உழைப்புடன் செயல்பட்டால் பணிபுரியும் இடங்களில் தங்கள் துறை சார்ந்த பணிகளில் சிறந்து விளங்கி வாழ்வில் உயர்ந்த நிலையை அடைய முடியுமென்று சிறப்புரையாற்றினார்.

மேலும் பொறியியல் பட்டதாரிகள் தொழில்நுட்ப மாற்றங்களுக்கு தகுந்தவாறு தயார்படுத்திக் கொண்டு பொருளாதார சவால்களை எதிர்கொண்டு சமுதாய வளர்ச்சிக்கு பங்களிக்க வேண்டுமென்றும், டிஜிட்டல் உலகில் இந்திய சமுதாய கலாச்சாரத்தை பாதுகாத்து தொழில்நுட்ப அறிவை பெற்று நாட்டின் முன்னேற்றத்திற்கு துணைபுரிய வேண்டுமென்றும் சிறப்புரையாற்றினார். மேலும் இவ்விழாவில் 142 இளநிலை மற்றும் முதுகலை பொறியியல் மாணவ மாணவியருக்கு பட்டய சான்றிதழ் வழங்கி சிறப்பித்தார்.







## Staff Achievements

| Patent | | | | | |
|---|---|---|---|---|---|
| S.No | Authors | Title | Name of the Agency | Patent No | Published/ Filed/ Granted ( Date -Month -Year) |
| 1 | Mrs. A.Nishetha Jeflin Nixon, AP/EEE Mr. R.RajaKarthick, AP/EEE Mrs.R.Chitra, AP/EEE | Regenerative Shock Observer | Patent office, Government of India | 420322-01 | Published (19-07-2024) |
| 2 | Ms. S.Arul Jothi, AP/CSE Mrs. R.Keerthana,AP/CSE | AI based Device for detection of cardiac diseases | | 420508-001 | Granted (21/08/24) |

| Book Chapter | | | |
|---|---|---|---|
| S.NO | Authors | Title | Publisher |
| 1 | Mrs. S.Arul Jothi, AP/CSE | Fundamentals of Data Science and Analytics | The Charulatha Publications |



# விடுதி ஆண்டு விழா

நமது நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் விடுதி ஆண்டுவிழா 16.04.2024 அன்று சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக கேரளா மாநிலம், ராஜகுமாரியில் உள்ள சென்.மேரிஸ் பில்டர்ஸ் நிறுவனத்தின் தலைவரும் நமது விடுதியின் (2015-2019) முன்னாள் மாணவருமான திரு.பேசில் ஜான்சன் அவர்கள் கலந்து கொண்டு விடுதியில் தங்கி பயின்ற நினைவுகள் மற்றும் சொந்த தொழில் எவ்வாறு தொடங்லாம் அதற்கான வழிமுறைகள் மற்றும் வங்கிக்கடன்கள் குறித்து மாணவர்களிடம் பேசினார். இவ்விழாவிற்கு தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறையின் தலைவர் திரு.**T**.ராஜமோகன் அவர்கள் தலைமை தாங்கினார். மேலும் உறவின்முறையின் உபதலைவர் திரு.**P.P.**கணேஷ், பொதுச்செயலாளர் திரு.**M.M.**ஆனந்தவேல் மற்றும் பொருளாளர் திரு.**P.**பழனியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை விடுதியின் செயலாளர் திரு. உதயக்குமார் அவர்கள் சிறப்பாக செய்திருந்தார். மேலும் விடுதி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.









## Signout Day (2020 - 2024 Batch)

தேனி நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் இறுதியாண்டு மாணவர்களுக்கு பிரிவு உபச்சார விழா (Sign Out Day) 27.04.2024 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் இறுதியாண்டு மாணவ, மாணவிகள் கல்லூரியில் பயின்ற காலங்களில் பெற்ற கல்வி அறிவு, மாணவர்களின் வளர்ச்சிக்கு பேராசிரியர்களின் அணுகுமுறைகள் மற்றும் கல்லூரியின் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். மேலும் வருங்காலத்தில் தாங்கள் பயின்ற கல்லூரியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்போம் என்று உறுதியளித்தனர். மாணவர்களுக்கு கல்லூரியின் முன்னாள் மாணவர்களின் கூட்டமைப்பிற்கான உறுப்பினர் சான்றிதழ் மற்றும் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டது. அனைத்து துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள் மாணவர்களுக்கு தங்களுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.





# பணி நியமன ஆணை வழங்கும் விழா - 2024

தேனி நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் பணி நியமன ஆணை வழங்கும் விழா 27.4.2024 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் உறவின்முறை பெரியோர்கள் கலந்து கொண்டு 105 இளம் பொறியாளர்களுக்கு பணிநியமன ஆணையை வழங்கினார்கள். இதில் மாணவர்கள் தங்களின் பெற்றோர்களுடன் கலந்து கொண்டு பணி நியமன ஆணையை பெற்றுக்கொண்டனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

## Placed Students 2023-24

- TCS (Tata Consultancy Services) — Count : 04 — Salary Rs.3,36,877 /- Per Annum
- ZOHO — Count : 02 — Salary Rs.7,00,000 /- Per Annum
- M&S — Count : 05 — Salary Rs.4,00,000 /- Per Annum
- ARRAA Energy — Count : 08 — Salary Rs.3,00,000 /- Per Annum
- Vintorix — Count : 07 — Salary Rs.2,64,000 /- Per Annum
- ZF — Count : 07 — Salary Rs.2,16,900 /- Per Annum
- Data Patterns — Count : 01 — Salary Rs.4,00,000 /- Per Annum
- Regami solutions — Count : 01 — Salary Rs.3,00,000 /- Per Annum
- Delphi - TVS Technologies — Count : 55 — Salary Rs.2,04,000 /- Per Annum
- IJL — Count : 06 — Salary Rs.1,98,000 /- Per Annum
- Pramoda Rebar Private Limited — Count : 06 — Salary Rs.2,04,000 /- Per Annum
- WG Tech — Count : 05 — Salary Rs.2,16,000 /- Per Annum
- Indomer Coastal Hydraulics (P) Ltd. — Count : 02 — Salary Rs.2,40,000 /- Per Annum
- NeoLync — Count : 06 — Salary Rs.1,92,000 /- Per Annum

**Maximum Salary Rs. 7 /- LPA**






## NSCET Campus Campany

நமது நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் **NSCET Campus Company** 27.4.2024 அன்று துவங்கப்பட்டது. இத்துவக்க விழாவில் **WG TECH Solutions Private Limited** என்ற நிறுவனத்தின் கிளை நிறுவனத்தை நமது கல்லூரியில் துவங்கியது. இந்நிறுவனத்தில் நமது கல்லூரியின் **ECE** துறை மாணவிகள் 5 பேருக்கு வேலை வாய்ப்பினை வழங்கியுள்ளது. இதன் மூலம் மாணவிகள் நமது கல்லூரியில் இருக்கும் கிளை அலுவலகத்திலே பணிபுரியலாம் என அந்நிறுவனத்தின் தலைவர் திரு.கண்ணன் சீனிவாசன் அவர்கள் தெரிவித்தார். கல்லூரியில் புதிய கம்பெனியின் கிளை தொடங்கியது பெருமகிழ்ச்சியடைகிறது.






# விளையாட்டு விழா

நமது நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் 16.04.2024 அன்று கல்லூரியின் விளையாட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறையின் தலைவர் திரு.**T**.ராஜமோகன் அவர்கள் தலைமை தாங்கினார். மேலும் உறவின்முறையின் உபதலைவர் திரு**.P.P.**கணேஷ், பொதுச்செயலாளர் திரு.**M.M.**ஆனந்தவேல் மற்றும் பொருளாளர் திரு.**P.**பழனியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இவ்விழாவில் தேசிய பதக்க வீரர் மற்றும் இந்திய ராணுவத்தின் தடகள பயிற்சியாளருமான திரு.**L**.ராம்குமார் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களிடையே விளையாட்டில் முறையான பயிற்சி, ஆர்வம் மற்றும் விளையாட்டு பயிற்சியாளர்களின் ஒருங்கிணைப்பு, தினமும் இரண்டு மணி நேரம் விளையாட்டிற்கான பயிற்சி ஆகியவை இருந்தால் அனைத்து மாணவர்களும் விளையாட்டு துறையில் வெற்றி பெறலாம் என்றும், மத்திய மாநில அரசு துறைகளில் விளையாட்டு வீரர்களுக்கான வேலைவாய்ப்பு சலுகைகள், மற்றும் அரசுதுறையில் பணிபுரியும் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் பதவி உயர்வு, விளையாட்டு துறைகளில் பயிற்சி பெறும் வழிமுறைகள் பற்றி மாணவர்களிடையே எடுத்துரைத்தார். மேலும் கல்விக்கும் விளையாட்டுக்கும் சமமான முக்கியத்துவம் தரப்பட வேண்டும் என்றும் சிறப்புரையாற்றினார். இவ்விளையாட்டு விழா போட்டிகளில் நமது கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. மேலும் கல்லூரியின் செயலாளர்கள், இணைச்செயலாளர்கள், முதல்வர்கள், துணைமுதல்வர்கள் , பேராசிரியர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.







## Staff Journal Publications

| S.No | Date | Name of the Faculty/Department | Title of the Paper | Name of the Journal | Page No, Issue No, Vol. No, Published Date / Month |
|---|---|---|---|---|---|
| 1 | 05-07-2024 | Dr.M.Sathya & VP,HoD/IT | Enhancing Network Anomaly Intrusion Detection with IoT Data-driven BOA- CNN-BiGRU-AAM - Net Classification | Journal of Machine and Computing 4(3)(2024) | 04-03-2024 |
| 2 | 24-07-2024 | Dr.R.Athilingam,HoD,EEE<br>Mr. K.Ganesh, AP/EEE<br>Mr.C.Shiva, AP/EEE | A Review on Non-Invasive Technology for Monitoring Blood Glucose in the Management of Diabetes | IRJMETS | Volume 06/ Issue 07/ 2024/07/2024 |
| 3 | 07-07-2024 | Mrs. R.Vinitha,TF/S&H<br>Mrs.B.Abinaya, TF/S&H | Preparation of Catridge Ink | TIJER | Vol 11, Issue 7,July -2024 |
| 4 | 31-07-2024 | Dr.C.Mathalai Sundaram, Principal<br>Dr.B.RadhaKrishnan, HoD/Mech | Wear Analysis of Al-SiC-Jute ash hybrid composite via stir casting process | Springer Nature Switzerland AG 2024 | 31-07-2024 |
| 5 | 08-09-2024 | Mrs. R.Vinitha,TF/S&H<br>Mrs.B.Abinaya, TF/S&H | Review on biological of cu and zn Schiff base complex of glysine – curcumin | Tijer -UGC | Volume-11 Issue -8 |

# Cell Activities

| S.No | Date | Event Name | Guest Name | Cell Name |
|---|---|---|---|---|
| 1 | 18.05.2024 | Guest Lecture on Exploring Deep Learning Networks for Computer Vision | Dr.D.Devaraj, M.E., Ph.D.,Senior Professor, Department of EEE, Kalasalingam Academy of Research and Education. | Professional Society & Department Association |
| 2 | 15.06.2024 | " Impact Lecture Series - 2024" | Dr. R. Ramachandran District Coordinator - EDII TN, District Collectorate Office,Virudhunagar<br>Mr.S.Martin Ruso Co-ordinator, Entrepreneurship Development and Innovation Institute Tamilnadu (EDII-TN) Theni District. | INSTITUTION'S INNOVATION COUNCIL(IIC) AND ENTREPRENEURSHIP DEVELOPMENT CELL(EDC) |
| 3 | 11.07.2024 | " Career Catalyst : Competitive Examinations and Trends in Employment " | Thiru T Arun Nehru District Employment Officer. I/c District Employment and Career Guidance<br>Tmt M kalaiselvi Welfare Officer, EX Services Men Welfare Office, Theni<br>Thiru.K Mohanraj Assistant Director, District Industries Center Theni | Placement Cell , Career Guidance & Higher Education Cell & Theni District employment office |
| 4 | 04.07.2024 | "Lecture on Personality Development & Soft Skills" | Mr. Khaleel Rehman Founder & CEO, ACTION DnA,Chennai.<br>Mr. Muralidaran R Trainer / Unit Franchisee, ACTION DnA,Chennai. | Placement Cell and Career Guidance & Higher Education Cell |
| 6 | 31.08.2024 to 02.09.2024 | NSCET - HACKATHON - BOOT CAMP | Dr.C.Mathalai Sundaram, M.E., MBA., Ph.D., Principal, NSCET. | ENTREPRENEURSHIP DEVELOPMENT CELL(EDC) & INSTITUTION'S INNOVATION COUNCIL(IIC) |
| 7 | 24.08.2024 | Guest Lecture on "Opening New Gates of Wisdom & Job Opportunities in Japan" | Mr. Vignesh Mitsume, B.Sc ., CT Senior Product Manager , Microsoft Corporation Tokyo, Japan. | Training and Placement Cell & Career Guidance and Higher Education Cell |
| 8 | 04.09.2024 | "GATE 2025 Examination Awareness Program" | Dr.A.Solairaj, M.E., Ph.D., MISTE., Associate Professor-CSE, Co-ordinator Career Guidance & Higher Education Cell, NSCET. | Career Guidance & Higher Education Cell |
| 9 | 16.09.2024 | " Social Justice Day " - Pledge | Dr.Bala Subramaniam MD( Anesthesia)DA, Professor and HOD, Department of Emergency Medicine Theni Medical College. | Women Empowerment Cell (WEC) & Inner Wheel Club of Theni |
| 10 | 16.09.2024 | Induction Program on Cardiopulmonary Resuscitation Program | Dr.Bala Subramaniam MD( Anesthesia)DA, Professor and HOD, Department of Emergency Medicine Theni Medical College. | Youth Red Cross (YRC) , Department of Science and Humanities |











# Department Activities

| S.No | Date | Event Name | Guest Details | Department Name |
|---|---|---|---|---|
| 1 | 12.04.2024 & 13.04.2024 | Industrial Visit | Kendra, Kanyakumari. | Department of Civil Engineering |
| 2 | 7.4.2024 & 08.04.2024 | Industrial Visit | Infosys, Mysore. | AI&DS, IT, CSE Departments |
| 3 | 05.04.2024 | National Level Technical Symposium "Electra Sphere - 2K24" | Dr.C.Mathalai Sundaram,M.E., MBA., Ph.D., Principal, NSCET. | Department of ECE |
| 4 | 09.04.2024 & 10.04.2024 | Industrial Visit | Kundha Power Plant | Department of EEE |
| 5 | 08.04.2024 | Workshop on "Electric Vehicle Technology" | Dr.D.Prince Winston, Professor & Dean Research, Deptof EEE, Kamaraja College of Engineering and Technology, Madurai. | Department of EEE |
| 6 | 05.04.2024 | Guest Lecture on " Mastering the Wonders of Neural Networks: An Expert Lecture | Dr.R.Athilingam, M.E., Ph.D., Associate Professor - EEE, NSCET. | Department of IT, AI&DS |
| 7 | 26.04.2024 | Conference on " AMPSE - 2K24" | Dr.Mohd Ubaidullah, MRSC (London), College of Science, King Saud University, Riyadh - 11451, KSA. | Department of MECH |
| 9 | 15.08.2024 | 78th Independence Day | Mr.T.Rajamohan, B.Sc., President, TMHNU. | Department of Physical Education |
| 10 | 04.09.2024 | Induction Programme "Bridging the Gap" | Mr.A.Rajkumar, B.B.A, Secretary, NSCET.<br>Mr.A.S.R. Maheswaran, Scretary, NSCET.<br>Er.s.Naveen Ram, Joint Secretary, NSCET. | Department of Science and Humanities |












## முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான துவக்க விழா 15th Fresher's Day

தேனி நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான குசநளாநச'ள னுயல 12.09.2024 அன்று நடைபெற்றது. இறுதியாண்டு பயிலும் மாணவ, மாணவிகள் முதலாம் ஆண்டு மாணவர்ளுக்கு பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர். இவ்விழாவில் தேனி, தமிழ்நாடு மின்சாரவாரியத்தின் கண்காணிப்பு பொறியாளர் நுச.யு.சகாயராஜ் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, மாணவர்கள் கல்லூரியில் பெற்றுக் கொண்ட அறிவனை சமுதாயத்தில் செயல்படுத்தி தேசத்திற்கு வலிமையான வளமான சமுதாயத்தை மாணவர்கள் உருவாக்கிட வேண்டுமென்றும், வாய்ப்புகளை சரியாக பயன்படுத்தி வளர்ச்சி ஒன்றே நோக்கம் என்று பொறியியல் மாணவர்கள் செயல்பட வேண்டுமென்று மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்கி சிறப்புரையாற்றினார்.

மேலும் பெற்றோர் குழந்தைகளுக்கிடையோன உறவுகளை மேம்படுத்துதல், ஆசிரியர்கள், மாணவர்களிடையோன உறவுகளை மேம்படுத்துதல், மாணவ பருவத்தில் தற்காலிகமான மகிழ்ச்சியினை தவிர்த்து, நேர்மறையான எண்ணங்களை வளர்த்து எதிர்கால தேவைக்கான அறிவு மற்றும் ஆற்றல்களை பெறுவதற்கான வழிமுறைகள், தலைமை பண்பு, ஆங்கில மொழித்திறனை வளர்த்துக் கொள்ளுதல், நேரத்தை சரியாக பயன்படுத்துல், வாழ்வின் மாற்றங்கள், சவால்களை எதிர்கொள்ளும் திறனை வளர்த்து கொள்ளுதல், ஆகியவற்றை பற்றி விளக்கினார்.










## Staff Achievement

தமிழக அரசின் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் மதுரை மண்டல பொறியியல் கல்லூரிகளில் 2023 – 24 ஆம் கல்வியாண்டிற்கான சிறந்த நான் முதல்வன் **SPOC** க்கான விருதினை நமது பொறியியல் கல்லூரியின் ஆயரெகயஉவரசைபை நுபெறைநெசைபை துறைத்தலைவர் **திரு.A.வேம்பாத்துராஜேஷ்** அவர்கள் மாண்புமிகு தமிழக அமைச்சர்கள் **திரு.உதயநிதி ஸ்டாலின்** மற்றும் **திரு.பொன்முடி** அவர்களிடமிருந்து பெற்றுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.




### ளுவரனநவெ யுஉாநைளநஅநவெள

| SI No | Date | Name of the Student | Event Name | CASH AWARD | Program Organizer & Venue |
|---|---|---|---|---|---|
| 1 | 11.08.2024 | Ms.R.Monica,II Year - EEE | Speech Comptetion | Rs. 5000 / - | Nadar Saraswathi College of Arts and science, Vadapudupatti. |
| 2 | September Month | Mukilan,IV - CSE | TN Skills | National Level 2nd Prize Rs.70000 | Chennai |
| 3 | 23.08.2024 | R.Bhuvanalakshmi T. Mamitha, S.Gobika IV YEAR - EEE | National Space Day - 2024 | 2nd Prize | Kodaikanal Solar Observatory, Kodaikanal |
| 4 | September Month | R.RAMACHADRAN IV YEAR MECH | MACHINE LEARNING | [1 PRICE - OUT OF 80 BATCH] | IIT MADRAS COLLEGE IN CHENNAI |
| | | | Tech star startup weekend | 4TH price - out of 120 batch] | ANNA UNIVERSITY IN CHENNAI |






# Sports Achievements

| SI No | Date | Name of the Student | Event Name | Position | Program Organizer & Venue |
|---|---|---|---|---|---|
| 1 | 08.09.2024 | G. K. Phiramoth- II CSE | District Cycling Championship | II Position | State Cycling Association, Madurai |
| 2 | 17.09.2024 To 19.09.2024 | P. Devendra Kumar- II AI&DS | CM Trophy Athletics (Men) Shot-put- I & Discus Throw- II | Cash Award-Rs. 5000/- | SDAT Stadium, Theni |
| 3 | 17.09.2024 To 19.09.2024 | G. Yogesh- III ECE | CM Trophy Silambum (Men) | I Position Cash Award-Rs. 3000/- | |
| 4 | 17.09.2024 To 19.09.2024 | Akilan- III CSE<br>Vijay Akash- III CSE | CM Trophy Badminton- Doubles (Men) | I Position Cash Award- Rs. 3000/- | |
| 5 | 17.09.2024 To 19.09.2024 | J. Vijay- IV MECH | CM Trophy Swimming (Men) | I Position Cash Award- Rs. 3000/- | |
| 6 | 17.09.2024 To 19.09.2024 | R. Vishagan- III MECH M. Alagar- III MECH<br>B.Vishnuparamesh- II AI&DS B. Thiyagarajan- III EEE<br>A. Jeevanathan- II ECE S. Sabareeshwaran- IV ECE<br>T. Aravind- III EEE K. Bala Dinesh- II CSE<br>K. Ajay Prasath- IIAI&DS | CM Trophy Handball (Men) | II Position Cash Award- Rs. 18000/- | |
| 7 | 17.09.2024 To 19.09.2024 | A.Kavin Prashad- II CSE | CM Trophy Chess (Men) | II Position Cash Award- Rs. 2000/- | |
| 8 | 17.09.2024 To 19.09.2024 | A.Mohammed Nowfil- II EEE | CM Trophy Athletics (Men) | III Position Cash Award- Rs. 1000/- | |
| 9 | 17.09.2024 To 19.09.2024 | K. Uvasri- IV CSE S. Punitha- IV CSE<br>G. Roobini- IV CSE S. Reshma- III EEE<br>V. Atchaya Kamali- II ECE K. Devadharshini- II ECE<br>G. Santhiya- II ECE S. Subitchana Sri- II CIVIL<br>P. Pooja – II ECE S. Nandhini- III IT | CM Trophy Basketball (Women) | III Position Cash Award- Rs. 10000/- | |
| 10 | 23.09.2024 & 24.09.2024 | G. K. Phiramoth- II CSE | State Cycling Championship | II Position | State Cycling Association, Vellur. |
| 11 | 30.09.2024 & 01.10.2024 | R. Vishagan- III MECH M. Azhahar- III MECH<br>B.Vishnuparamesh- II AI&DS<br>B. Thiyagarajan- III EEE A. Jeevanathan- II ECE S. Sabareeshwaran- IV ECE<br>T. Aravind- III EEE K. Bala Dinesh- II CSE<br>K. Ajay Prasath- II AI&DS S. Arunesh Pandi- III ECE | Anna University Zone-17 Basketball Women Tournament | III Position | Chettinad College of Engineering & Technology, Karur |










# WAVES 2024

நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் 27.09.2024 & 28.09.2024 அன்று **Waves 2024** கலைநிகழ்ச்சி நடைபெற்றது.இவ்விழாவிற்கு தன்னம்பிக்கை பேச்சாளர், கவிஞர், எழுத்தாளர், மற்றும் தமிழ் ஆராய்ச்சியாளருமான மதுரை தமிழ் இளவல் திரு.**V**.ராமகிருக்ஷ்ணன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு தன்னம்பிக்கை மூலம் மட்டுமே வாழ்வில் அனைத்து நிலைகளிலும் வெற்றி பெற முடியுமென்றும், இளம் தலைறையினர் தோல்விகளை சந்திக்க கற்றுக் கொள்ளுவதன் மூலம் பல சிறந்த வெற்றிகளை அடைய முடியுமென்றும் பொறியியல் பட்டதாரிகள் தங்கள் துறை சார்ந்த திறமைகளோடு ஆங்கில மொழி திறமையை வளர்த்துக் கொள்ளுதல், பொறியாளர்கள் தங்கள் அறிவின் மூலம் நவீன உலகத்தை உருவாக்கி வருகின்றனர். என்றும் சமூக வலைதளங்களில் தவிர்க்க வேண்டிய விக்ஷயங்கள், கல்லூரி காலங்களில் நல்ல தோழர்களை அடையாளம் காண வேண்டுமென்றும் சிறப்புரையாற்றினார். மேலும், சிறந்த புத்தகங்களை வாசிக்கும் திறனை வளர்த்துக் கொள்ளுவதன் மூலம் வாழ்க்கையின் பல சிக்கல்களை தீர்க்கும் வாய்ப்புகள், நேர்மறையான சிந்தனைகளை மாணவர்கள் வளர்த்துக் கொள்ளுதல் ஆகியவை வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான எளிய வழியாக அமைகிறதென்றும், பாரம்பரிய தமிழ்பண்பாடு, கலாச்சாரங்கள் சமூக அக்கறை, சமூகம் பற்றிய உணர்வுகளோடு தங்களை வளர்த்துக் கொள்ளுதல் ஆகியவற்றைப் பற்றி விளக்கினார்.

இவ்விழாவில் மாணவ, மாணவிகளுக்கு நடனம், பாட்டு, மெஹந்தி போடுதல், சிகை அலங்காரம், வீடியோ மேக்கிங், போட்டோகிராபி, மைம், ஓவியம், பூங்கொடுத்து செய்தல், சமையல் போட்டி மற்றும் பேஷன் ஷோ போன்ற போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் மாணவ, மாணவிகள் அதிக ஆர்வத்துடன் பங்கு பெற்றனர். இப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்களும் மற்றும் அனைத்து போட்டிகளிலும் கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணிக்கு பரிசுக்கோப்பையும் வழங்கப்பட்டது.



# NSCET HACKATHON (A 36 HOURS TECH MARATHON)

நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் முதல் முறையாக புது முயற்சியாக மாணவர்களின் தொழில்நுட்பத் திறனை அதிகரிக்கும் பொருட்டு மாணவர்களுக்கு **NSCET Hackathon (A 36 Hours Tech Marathon)** நிகழ்ச்சி 19.09.2024 & 20.09.2024 ஆகிய 2 நாட்கள் தொடர்ந்து 36 மணி நேரம் நடைபெற்றது. ஹேக்கத்தான் தொழில்நுட்ப தொடர்போட்டிக்கு அமெரிக்கா டெஸ்லா சைபர் செக்யூரிட்டி, தலைமை நிர்வாக அதிகாரி திரு.வரதராஜ்கிருக்ஷ்ணன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களிடையே உலகளாவிய தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சி பொறியியல் துறைகளில் எதிர்கொள்ளும் தேவைகளுக்கான தீர்வினை **(Problem Solving)** அளிக்கும் கண்டுபிடிப்புகள் மற்றும் டிஜிட்டல் டிரான்ஸ்பர்மேசன் செக்யூரிட்டி, இன்ப்ராஸ்ட்ராக்சர்ஸ் செக்யூரிட்டி ஆகிய துறைகளின் வளர்ச்சி அதன் மூலம் ஏற்படும் தொழில்நுட்ப மாற்றங்கள், வேலைவாய்ப்புகள் ஆகியவற்றைப் பற்றி மாணவர்களிடையே சிறப்புரையாற்றினார். மேலும் இவர் மாணவர்களிடையே தொழில்நுட்ப படிப்புகள் , உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் குறித்து கலந்துரையாடினார். மேலும் மாணவர்களின் கண்டுபிடிப்புகளை பார்வையிட்டு சிறந்த கண்டுபிடிப்பினை தேர்வு செய்ய பல்வேறு துறைசார்ந்த நடுவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். இவ்விழாவில் மொத்தம் 108 அணிகள் கலந்து கொண்டனர் வெற்றி பெற்ற முதல் 2 அணிக்கு ரூ.30000 ரொக்கப்பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இப்போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

